தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, மார்ச் 28, புதன்கிழமை.

பங்குனி 15, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.''

எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒரு தன்மையானதே. ஆயினும் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பு இயல்பு ஒத்து இருப்பதில்லை.

I. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சோலையார் அணைப்பகுதியில் பால்பண்ணை ஏற்படுத்தும் திட்டம்.

483-(*வினா எண். 21597) திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் வால்பாறை வட்டம் சோலையார் அணைப்பகுதியில் பால்பண்ணை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை,

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.